1982 மார்ச் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்னையோ, ஒழுங்குப் பிரச்னையோ, எதையும் சபையில் எப்படி எழுப்ப வேண்டும் என்ற முறையிருக்கிறது. இப்படி திடீர் என்று எழுந்து கேட்பது கூடாது. இந்த முறை சரியல்ல. முறையாக எழுதிக் கொடுங்கள். அதில் உரிமை மீறல் பிரச்னை இருக்கிறதா இல்லையா என்பதை முதலில் பார்த்துவிட்டு பிறகு அனுமதி அளித்தவுடன் சபையில் விவாதிக்கலாம்.

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, எங்கள் கட்சி உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க நாங்கள் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறோம். மத்தியில் ஆளுகிற பொறுப்பில் இருக்கிற கட்சியைச் சார்ந்த ஒரு மாநில கிளைத் தலைவர் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் நாங்களே நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது எங்கள் உரிமையைப் பாதிக்கிறது. அவர்கள் அச்சுறுத்தியிருக்கிறார்கள். அது பற்றி ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறேன். அது என்னவாயிற்று என்பதைத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அறையில் வந்து கேளுங்கள் ; இப்படி அவையில் கேட்பதை அனுமதிக்க முடியாது.

(இ) விடுதி விலாசத்திற்கு வரும் உறுப்பினர்கள் கடிதம்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, சட்டமன்ற விடுதி முகவரிக்கு எங்களுக்கு எழுதப்பட்டுள்ள பல கடிதங்கள் திருடப்பட்டிருக்கின்றன. எங்களுக்கு கடிதங்கள் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. ஆகவே, எங்களுக்குக் எழுதப்படுகிற கடிதங்கள் எங்கள் கைக்கு வந்து சேர தக்க நடவடிக்கை எடுப்பீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவனிக்கப்பெறும்; முதலில் உறுப்பினர்கள் பாதுகாப்பு பற்றி பேசுவோம்.

3. உரிமைப் பிரச்சினை.

விடுதி வளாகத்தில் மன்ற உறுப்பினர் தாக்கப் பெற்றுள்ளது

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, நானும் சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் தீர்த்தராமன், சுந்தரமூர்த்தி ஆகியோரும் ஒரு உரிமை மீறல் பிரச்